**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திரு.E.பிரகாசம், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2,பொள்ளாச்சி.**

**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

<u>பட்டிகை விசாரணை வழக்கு எண். 134/2020</u>

<u>(CNR NO: TNCB120021412019)</u>

**செல்வராஜ்** (47/2019),
**த/பெ. முத்துசாமி**,
5/17 **தேவம்பாடி வலசு**,
**தேவம்பாடி**,
**பொள்ளாச்சி.** .......புகார்தாரர்

// எதிர் //

**கிருஷ்ணன்** (50/2019),
**த/பெ. வேலாயுதம்**,
7/48 **கலைஞர் நகர்**,
**ராமபட்டிணம்**,
**பொள்ளாச்சி.** .......எதிரி

இவ்வழக்கானது கடந்த 24.02.2020 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. இளங்கோ B.Sc., LLB., அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு. Su. செந்தில்குமார் B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டு இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**//தீர்ப்புரை//**

இவ்வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் எதிரி குற்றமிழைத்ததாகவும், தக்க தண்டனை வழங்கிட கோரி கு.வி.மு.ச. பிரிவு 200 உ/இ 142 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. புகாரின் சுருக்கம்**

இவ்வழக்கில் புகார்தாரர் தனது புகாரில், எதிரி எனக்கு நன்கு பழக்கமானவர். எதிரி கடந்த 07.07.2019 ம் தேதியன்று என் வீட்டிற்கு வந்து கைக்கடனாக ரொக்கமாக ரூ.1,00,000/- அவருடைய அவசர தேவைக்காக பெற்றுக் கொண்டு அன்றையதினமே ராமபட்டிணம் கிளை, யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக் காசோலை ஒன்றை ரூ.1,00,000/- க்கு 07.08.2019 ம் தேதியிட்டு கொடுத்துள்ளார். காசோலை எண் 014712 ஆகும்.

எதிரி கொடுத்த மேற்படி காசோலையை புகார்தாரர் அவர் கணக்கு வைத்துள்ள பொள்ளாச்சி கிளை, யூகோ வங்கியில் எதிரியின் அறிவுறுத்தலின் பேரில் 07.08.2019 ம் தேதி அன்று வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார், ஆனால் மேற்படி காசோலை போதிய பணமில்லை என்ற குறிப்புடன் 09.08.2019 ம் தேதி அன்று திருப்பப்பட்டது.

மேலும், தனக்கு எதிரி கொடுத்த காசோலையானது திருப்பப்பட்டது குறித்தும், தனக்கு எதிரி கொடுக்க வேண்டிய மேற்படி கடன் தொகையை தன் வசம் திருப்பி கொடுக்குமாறு கேட்டும் கடந்த 14.08.2019 ம் தேதி தனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை எதிரி, கடந்த 19.08.2019 ம் தேதியன்று பெற்றுக் கொண்டு இதுநாள்வரை காசோலைக்குரிய தொகையோ திருப்பித் தரவில்லை என்றும் புகார்தாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

**2. எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 204 ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது**

புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் எதிரி குற்றமிழைத்ததாக கு.வி.மு.ச. பிரிவு 200 உ/இ 142 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் புகார் தாக்கல் செய்துள்ளார். புகார்தாரரின் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டு, வாதுரை கேட்கப்பட்டு, வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு, கு.வி.மு.ச. பிரிவு 204 ன் கீழ் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பிட போதிய முகாந்திரம் இருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**3. எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் நகல் வழங்கப்பட்டது**

எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அவருக்கு வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் பற்றி கு.வி.மு.ச. பிரிவு 251 ன் கீழ் வினவ எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**4. புகார்தாரர்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சி சான்றாவணங்கள் விபரம்**

புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) ன் கீழ் கேள்வி வினவி கேட்கப்பட்டது**

இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரியை பாதிக்கின்ற அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)- ன் கீழ் வினவ எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரணை செய்திட சாட்சி உள்ளதாகவும் பதிலளித்துள்ளார். பின்னிட்டு எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்ட பின்னர் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**6. எதிரி தரப்பின் எதிர்வாதம்**

எதிரி தரப்பில் எதிரி குற்றத்தை செய்யவில்லை எனவும் பொய்யான வழக்கு எதிரியின் மீது புனையப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது, இருந்த போதிலும் சாட்சிகளோ சான்றவாணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**7. இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகள் :-**

**எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?** என்பதேயாகும்.

**8) தீர்வு, தீர்வுக்கான காரணங்கள் மற்றும் விளக்கங்கள் :-**

**(i) பு.சா.1ன் சாட்சிய சுருக்கம்,**

புகார்தாரர் தனது புகாரில் சொல்லியுள்ள சங்கதிளையே தனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளார். மேலும் தனது தரப்பில், எதிரி, 07.08.2019 தேதியிட்டு கொடுத்த ராமபட்டிணம் கிளை, யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக் காசோலை அசல் **பு.சா.ஆ.1** ஆகவும், 09.08.2019 ம் தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ **பு.சா.ஆ.2** ஆகவும், 14.08.2019 ம் தேதியிட்டு புகார்தாரர் எதிரிக்கு தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு வழங்கிய சட்ட அறிவிப்பு நகல் **பு.சா.ஆ.3** ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்காக ஒப்புகை அட்டை **பு.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தனது குறுக்குவிசாரணையில், வழக்கறிஞர் அறிவிப்பு, புகாரிலும் நான் 07.07.2019 ம் தேதி பணம் கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் குடும்பத்தைப் பற்றி முழுமையான விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். எதிரியின் மனைவி கேரளா மாநிலத்தைச் சேர்ந்த நெல்லிப்பள்ளம் என்ற ஊரைச் சார்ந்தவர் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் புகார்தாரர் தனது குறுக்குவிசாரணை தொடர்ச்சியாக, எதிரி 07.07.2019 ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு என் வீட்டில் வைத்து பணம் வாங்கினார். எதிரி அவரது மனைவியின் பெற்றோர் வீடு திறப்புவிழாவிற்காக 06.07.2019 அன்று கேரளா சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி திரும்ப 08.07.2019 அன்று தமிழ்நாட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியத்தினை பொய் என்று நிரூபணம் செய்யும் வகையில் எதிரி தரப்பில் சாட்சிகளையோ சான்றாவணங்களையோ எதிரி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் எதிரி, புகார்தாரரிடமிருந்து பணம் வாங்கவில்லை என்றோ, வழக்குக் காசோலை கொடுக்கவில்லை என்றோ, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்பது குறித்தோ சாட்சிகளையோ சான்றாவணங்களையோ எதிரி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை, எனவே புகார்தாரர், எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை ஐயம் திரிபுற நிரூபணம் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9) முடிவாக,**

(i) எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு, எதிரிக்கு 6 மாத காலம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும்,

(ii) எதிரி, புகார்தாரருக்கு காசோலை தொகையான ரூ.1,00,000/- ஐ ஒரு மாத காலத்திற்குள் திருப்பி கொடுக்கவும்,

(iii) மேலும் எதிரி புகார்தாரருக்கு இழப்பீடாக கு.வி.மு.ச. பிரிவு 357(3) ன் கீழ் ரூ.50,000/- ஐ செலுத்தவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் எதிரிக்கு 6 மாத கால மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் கு.வி.மு.ச. பிரிவு 255(2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**10) வழக்கு சொத்து**

இவ்வழக்கில் தடய பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவே அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**11. புகார்தாரர் தரப்பு சாட்சிகள்**

**பு.சா.1** – செல்வராஜ் (புகார்தாரர்)

**12. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| **பு.சா.ஆ.1** | எதிரி, 07.08.2019 தேதியிட்டு கொடுத்த ராமபட்டிணம் கிளை, யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக் காசோலை அசல் | அசல் |
| **பு.சா.ஆ.2** | 09.08.2019 ம் தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ | கணிணி நகல் |
| **பு.சா.ஆ.3** | 14.08.2019 ம் தேதியிட்டு புகார்தாரர் எதிரிக்கு தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு வழங்கிய சட்ட அறிவிப்பு நகல் | அலுவலக நகல் |
| **பு.சா.ஆ.4** | மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்காக ஒப்புகை அட்டை | அசல் |

**13. எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்** : இல்லை

**14. குறிப்பு:**

1)எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

PRAKASAM ELANGOVAN
Digitally signed by PRAKASAM ELANGOVAN
Date: 2026.03.03 11:20:13 +05'30'

**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**